பட்ட தொகை ரூ 8,036 ஆகவே, இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 24,065 கொசூர் சந்தைக்காக செலுத்தப்பட்ட தொகை ரூ. 3,254. ஆகவே இன்னும் செலுத்தப்படவேண்டிய தொகை ரூ. 9,747. . பாக்கித் தொகைகளை குத்தகைதாரிடமிருந்து நீதிமன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே, நடவடிக்கை எடுப்பதற்குள்ளாக முழுத்தொகையையும் கட்டி யிருப்பதால், வட்டியையும் சேர்த்துக் கட்டியிருப்பதால் மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இதை வசூலிக்காமல் இருந்த அதிகாரிகள் யார் யார் என்று அறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாவட் ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் எற்கெனவே பல குறைபாடுகள் இருப்பதாக நான் இந்த மாமன்றத்தில் பல வினாக்களை எழுப்பியிருக்கிறேன். அதிலே இதுவும் ஒன்றுதான். அப்பொழுது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் பதில் அனுப்பியுள்ளதாக கூறியிருக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது இது போன்ற மாமன்றத் றத்திற்கு உரிய பதிலை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே அவர்கள் உரிய தகவலைத்தான் தருகிறார்கள், நாங்களும் உரிய பதிலைத் தான் தருகிறோம். அதிலே மாறுபாடு, குறைபாடு இருந்தால் சுட்டிக் காட்டலாம். பாக்கித் தொகைகளை குத்தகைக்காரரிடமிருந்து நீதிமன்றத் தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்திருந்தார். அந்த வகையிலேதான் அந்தப் பதில் அளிக்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பாக்கித் தொகைகள் பூராவும் பெற்றுவிட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். பாக்கித் தொகைகளைப் பெற்ற காரணத்தினால் கோர்ட்டில் இருக்கும் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டதா அல்லது அந்தத் தொகைக்கு எந்தக் கேசும் போடப்படவில்லையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சியாளர் இத் தொகைகளை நீதிமன்றத்தின் மூலமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பெறுகிறது என்று அப்பொழுது கூறிய பொழுதிலும், ஏலத் தொகை முழுவதும், 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் ஏலதார் கட்டியுள்ளார், மீதியுள்ள அபராத வட்டித் தொகை முழுவதையும் பின்னால் கட்டியுள்ளார், ஆகவே கோர்ட்டுக்கு இனிமேல் போக வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.